| விண்ணின் மழைத்துளி – மண்ணின் உயிர்த்துளி | | |
|---|---|---|
| மழைநீரை சேமிப்பீர் ! | | குடிநீரை பெருக்குவீர்!! |

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சாதாரணக்கூட்டம் வருகிற **30.11.2018**ம் தேதி கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கீழ்காணும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி அலுவலர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் **அக்டோபர் 2018–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண்.1464/2016/சி1)

2) இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் **அக்டோபர் 2018–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண்.1464/2016/சி1)

3) இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் **அக்டோபர் 2018–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண்.1464/2016/சி1)

4) இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் **அக்டோபர் 2018–**ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம். (க.எண். 1464/2016/சி1)

5) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகளில் (Home Composting) முறையை செயல்படுத்த 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறிய பிளாஸ்டிக் பேரல்கள் 1000 விநியோகம் செய்ய ஆகும் செலவினங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண்.210 நாள்.15.10.2018 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறிய பிளாஸ்டிக் பேரல்களை விநியோகம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி 20.11.2018 இல் கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (பேரல் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | சிவசக்தி டிரேடர்ஸ், ஈரோடு | ரூ.200/– |
| 2. | தனம் டிரேடர்ஸ், ஈரோடு | ரூ.210/– |

**அலுவலக குறிப்பு :–** மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் ரூ.200/– அளித்துள்ள சிவசக்தி டிரேடர்ஸ், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

6) அ) கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் ஆண்டு குத்தகை இனங்களின் குத்தகை காலம் 31.03.2019 ல் முடிவடைவதால் அவற்றை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகை உரிமம் ஒப்படைக்க வேண்டியுள்ளது. அரசு ஆணை (ந.நி.4) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 19.09.2008 ன் படி ஆண்டு குத்தகை இனங்களை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | குத்தகை இனத்தின் விபரம் | குத்தகை காலம் |
|---|---|---|
| 1. | புதிய பேருந்து நிலைய நவீன கட்டண கழிப்பிடத்தில் வசூல் செய்யும் உரிமை | 1.4.2019 முதல் 31.3.2022 வரை |

கீழ்கண்ட குத்தகை இனத்தை மூன்று ஆண்டு குத்தகைக்கு (01.04.2019 முதல் 31.03.2022 வரை) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறவும் .

ஆ) கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2018-19 முதல் 2020-2021 ஆம் ஆண்டிற்கான குத்தகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின் பொது கட்டுப்பாடுகள் மன்றத் தீர்மான எண் 175 நாள் 30.11.2017 ல் அங்கீகரிக்கப்பட்டது.

வ.எண்.1) மேற்படி பொது கட்டுப்பாட்டில் வ.எண்16 ல் ஆண்டு குத்தகை இனத்திற்கான பொது கட்டுப்பாட்டில் வரிசை எண் 1 முதல் 9 வரை உள்ள இனங்களின் உரிமையாணைதாரர்கள் ஏலம் உறுதி செய்த 3 நாட்களுக்குள் முழு உரிமையாணைத் தொகையையும் செலுத்தி விட வேண்டும். தவறினால் முன்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஏலத்தினால் ஏற்படும் சகலவிதமான இழப்பையும் ஈடு செய்ய வேண்டும். இத்தொகையை உரிமையாணை ஆண்டின் கடைசி ஆறு மாதங்களில் உரிமையாணைதாரர் கட்ட வேண்டிய மீதித் தொகை சாதாரணமாக வரவு வைத்துக்கொள்ளப்படும். ஆனால் அவை உரிமையாணைதாரரிடம் பாக்கி நிற்கும் உரிமையாணைத் தொகை கிஸ்து பாக்கி காலந்தவறி கட்டுவதால் ஏற்படும் வட்டி தொகை இதன் பின்னால் சொல்லப்படும் காரணங்களால் மறு ஏலம் வைப்பதால் ஏற்படும் இழப்பு முதலியவற்றிற்காக முதன்மையாக ஈடு செய்து கொள்ளப்படும். இவ்விதம் குறையும் தொகையை பூர்த்தி செய்து கொள்ள வேண்டியது அப்படி செய்யத் தவறினால் பொறுப்புத் தொகையை அவர் இழந்து விடுவதுடன் மேற்படி ஏலம் நடத்தும் அலுவலரால் உடனே மேற்சொன்ன கட்டுப்பாட்டின் பேரில் மறுபடியும் ஏலத்திற்கு விடப்படும். மேலும் தவறினவரை மறுபடியும் ஏலம் கோராதபடி விலக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ.எண்.2) வ.எண் 49-ல் உரிமையாணை தொகையை ஒவ்வொரு மாதமும் உரிமையாணைதாரர் அந்தந்த மாத 10 ந் தேதிக்குள்ளும் 10 ந் தேதி விடுமுறை நாளாயிருந்தால் அதற்கடுத்த வேலை நாட்களில் செலுத்த வேண்டியது. மேற்படி தொகை செலுத்தப்படாவிட்டால் செலுத்தாதிருக்கும் தொகைக்கு வட்டி நூற்றுக்கு வருடம் 1-க்கு 18 சதவீதம் சேர்த்து 10-ந் தேதி முதற்கொண்டு செலுத்த வேண்டியதாகும். தவணைத் தொகை 10-ந் தேதிக்குள் செலுத்தாமல் போனால் தவணை சரியான காலத்தில் செலுத்தத்தவறிய நாட்களுக்குத் தவனைத் தொகையும் அதற்குண்டான வட்டியும் அந்த மாதம் 20-ந் தேதிக்குள் செலுத்தத் தவறினால் உரிமையாணையை நகர்மன்றம் ரத்து செய்து உரிமையாணைதாரருக்கு செலுத்தப்பட்டிருக்கும் ஏல முன்பணத் தொகைகளை பாக்கி குத்தகைக்கு சரிசெய்யப்பட்டு உரிமையாணை மறு ஏலம் விடப்படும். மறு ஏலம் நடத்தி அதனால் ஏற்படும் எல்லா விதமான இழப்புகளுக்கும் உரிமையாணைதாரர் பொறுப்பாளி ஆவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ.எண்.3) மேற்படி வ.எண் 16-ல் கண்ட பொது கட்டுப்பாட்டை குத்தகை உரிமையாணைதாரர் ஏலம் முடிந்தவுடனேயே மொத்த குத்தகை உரிமையாணைத் தொகை ரூ1,00,000/-க்கு கீழ் உள்ள இனங்களுக்கு முழுத் தொகையினையும் உடன் செலுததப்பட வேண்டும். ரூ.1,00,000/- க்கு மேல் உள்ள இனங்களுக்கு ஏல முழுத் தொகையில் 50% ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் முன் பணமாக உடன் செலுத்தப்பட வேண்டும். தொகைக்கு வட்டி எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. மீதமுள்ள 50% தொகை 6 மாத தவணை முறையும் ஏப்ரல் மாதத்திலிருந்து பிரதி மாதம் 10 ந் தேதிக்குள் செலுத்தப்பட வெண்டும் தவறினால் முன்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஏலத்தினால் ஏற்படும் சகல விதமான இழப்பையும் ஈடு செய்ய வேண்டும். இத்தொகை குத்தகை உரிமையாணையாண்டின் கடைசி மாதங்களில் உரிமையாணைதாரர் கட்ட வேண்டிய மீதித் தொகை சாதாரணமாக வரவு வைத்துக் கொள்ளப்படும். ஆனால் அவை குத்தகை உரிமையாணைதாரரிடம் பாக்கி நிற்கம் குத்தகை உரிமையாணை தொகை கிஸ்து பாக்கி காலந்தவறிகட்டுவதால் ஏற்படும் இழப்பு முதலியவற்றிக்காக முதன்மையாக ஈடு செய்து கொள்ளப்படும். இவ்விதம் குறையும் தொகையை அவர் இழந்து விடுவதுடன் மேற்படி விற்பனை நடத்தும் அலுவலரால் உடனே மேலே சொன்ன கட்டுப்பாட்டின் பேரில் மறுபடியும் ஏலத்திற்கு விடப்படும். மேலும் தவறினவரை மறுபடியும் ஏலம் கோராதபடி விலக்கப்படும்.

வ.எண்.4) வ.எண் 49 ல் கண்ட பொது கட்டுப்பாட்டை ரூ.1.,00,000/- த்துக்கு மேற்பட்ட குத்தகை உரிமத்தின் மொத்த ஏலத் தொகையில் இரண்டு பங்கு முன்பணம் அல்லது ஆறு மாத கிஸ்து தொகையை செலுத்த வேண்டும். உரிமத்தின் மொத்த ஏலத்தொகையில் ஏற்கனவே கட்டியுள்ள ஆறுமாத முன்பணம் போக மீதி உள்ள தொகையை முறையே 6 சரி மாத தவணைகளில் ஏப்ரல் மாதம் முதல் ஒவ்வொருமாதமும் 10 ம் தேதிக்குள் அலுவலகத்தில் செலுத்த வேண்டும் 10 ம் தேதி விடுமுறை நாளாக இருந்தால் அடுத்த வேலை நாளில் செலுத்த வேண்டியது. மேலே கண்ட தேதிகளில் குத்தகை மற்றும் கடை வாடகை செலுத்த தவறினால் செலுத்தப்படாமல் இருக்கும் தொகைக்கு ரூ.100/- க்கு அதன் குறைந்த பாகத்திற்கு ரூ1.5/- வீதம் வட்டி சேர்த்து ஒவ்வொரு மாதத்திற்கும் செலுத்த வேண்டும். மேலே ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ.5/- அபராதம் செலுத்த வேண்டும் அப்படி செலுத்ததவறினால் குத்தகை உரிமதாரர் செலுத்தியுள்ள முன்பணத்தை பறிமுதல் செய்து கொண்டு உரிமத்தை மறு ஏலம் விடப்படும். அல்லது நகராட்சி மூலம் வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படும். ஏதாவது காரணத்தைக் கொண்டு மேற்கூறியவாறு மறு ஏலம் போடப்பட்டாலும் உரிமைதாரரால் பணம் செலுத்தப்படாமலும் இருந்தால் தொகை செலுத்தும் வரையில் மேற்படி வீதம் அபராதமும் வட்டியும் மாதமாதம் வசூலிக்கப்படும். அப்படி மறு ஏலம் போடுவதிலும் வேறு வித ஏற்பாடு செய்வதிலும் உண்டாகும் சகல வித இழப்பிற்கு முன் உரிமைதாரரே அதாவது முன் சென்றவர்களில் சொல்லப்பட்டவரே முழுப்பொறுப்பாகும் என திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட குத்தகை இனத்தை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

ஆ) மேற்படி குத்தகை இனத்திற்கான பொது கட்டுப்பாடு வ.எண் 1 மற்றும் 2 ல் உள்ளவற்றை வ.எண்3 மற்றும் வ.எண் 4 ல் உள்ளவாறு திருத்தம் செய்யலாம்.

இ) மேற்படி குத்தகை இன ஏல அறிக்கை மற்றும் திருத்தம் செய்யப்படும் பொதுக்கட்டுபாடு ஆகியவற்றை நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.25000/- மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

7) இந்நகராட்சி பகுதியில் உள்ள குடிசைப்பகுதிகளில் (Slum Area) வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடியிருப்பு வாசிகள் குடிநீர் இணைப்பு பெறுவதற்கான முன் வைப்பு தொகை ரூ.4000/–ஐ நான்கு சமதவணைகளில் (ஒரு காலாண்டிற்கு ரூ.1000/– வீதம்) செலுத்துவதற்கு குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 37 நாள்.30.04.2018–ல் அனுமதிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20983/2018/குவ1 நாள்.25.09.2018–ல் உரிய விதிகளை பின்பற்றி திருத்தம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி பொது மக்களின் ஆட்சேபனை / ஆலோசனை கேட்டு தினமணி நாளிதழில் 16.10.2018–ல் விளம்பரம் செய்யப்பட்டது. 30 நாட்களுக்கு மேலாகியும் இதுநாள் வரை எந்த ஒரு ஆட்சேபனையும் பொது மக்களிடமிருந்து வரப்பெறவில்லை.

எனவே குடிசைப்பகுதிகளில் (Slum Area) வசிக்கு பொருளாதாரத்தில் பின்தங்கிய குடியிருப்பு வாசிகள் குடிநீர் இணைப்பு பெறுவதற்கான முன் வைப்பு தொகை ரூ.4000/–ஐ நான்கு சமதவணைகளில் (ஒரு காலாண்டிற்கு ரூ.1000/– வீதம்) பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் இறுதி ஒப்புதல் பெற்று குடிநீர் உபவிதிகளில் உரிய திருத்தம் 01.01.2019 முதல் செயல்படுத்திட மண்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

8) கோபிசெட்டிபாளையம் நகராட்சி தினசரி மார்க்கெட் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்க நெடுஞ்சாலைத்துறை அனுமதி பெற்று நிழற்குடை அமைக்க இந்நகராட்சிக்கு ஆட்சேபனையின்மை கடிதம் ந.க.எண்.2003/18/இ1 நாள்.09.07.2018ன்படியும் நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் (க+ப) கோபி அவர்களின் கடிதம் ந.க.எண்.1520/2018/இவஅ–1 நாள்.03.08.2018ன்படியும் மேற்படி இடத்தில் அமைக்கப்பட்ட பயணிகள் நிழற்குடைக்கு மின்சார வசதி ஏற்படுத்தி தரவும் மேற்படி நிழற்குடைக்கு மின் விளக்குகள் அமைப்பதற்கும் பராமரிப்பு மற்றும் மின் கட்டண செலவினை தாமு செட்டியார் நகை மாளிகை நிறுவனத்தார் ஏற்றுகொள்ள உள்ளதாகவும் காவல் ஆய்வாளர் போக்குவரத்து காவல் நிலையம் கோபிசெட்டிபாளையம் அவர்கள் கடிதம் அளித்துள்ளார். எனவே நிழற்குடைக்கு ஆணையாளர் கோபிசெட்டிபாளையம் நகராட்சி என்ற பெயரில் மின் இணைப்பு பெறுவதற்கும் மேற்படி நிழற்குடையினை தொடர்ந்து தாமுசெட்டியார் மாளிகை நிறுவனத்தினர் உரிய அரசு விதிகளுக்குட்பட்டு பராமரிப்பு செய்திட அனுமதியளித்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம். (க.எண்.2003/2018/இ1)

9) இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட உள்ள தூய்மை பாரத இயக்கம் 2018–19 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கரட்டூர் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை (40000 CVM) Bio Mining முறையில் பிரித்தெடுத்து நிலத்தினை மீட்டெடுக்கும் பணிக்கு திட்ட நிர்வாக ஆலோசகர் (Project Management Consultant) வேண்டி இயக்குநர், சுற்றுச்சூழல் கல்வி மையம் அண்ணா பல்கலைக்கழகம் அவர்களிடம் கோரப்பட்டது. மேற்படி பணிக்கு கட்டணம் ரூ.6,00,000/– மற்றும் GST 18% ரூ.1,08,000/– ஆக மொத்தம் ரூ.7,08,000/– (ரூபாய் ஏழு லட்சத்து எட்டாயிரம் மட்டும்) என தெரிவித்துள்ளார். மேற்படி பணிக்கு 'Project Management Consultant' ஆக The Director, Center for Environmental Studies, Anna University Chennai அவர்களைநியமித்திடவும், அதற்கான செலவினத்தொகை ரூ.7,08,000/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுதல்.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம். (க.எண்.3395/2015/இ1)

10) இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் நிலங்களுக்கு பொது ஏலம் விடப்பட்டு **31.03.2018** உடன் **9** ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் அரசு ஆணை எண்.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.**03.07.2007**ன்படி அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையாக வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணையில் ஒப்புதல் பெறப்பட்டது. மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையை ஏற்பது குறித்து சம்பந்தப்பட்ட கடை குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைக்கு கடை நடத்த இயலாது, கடையை நகராட்சி வசம் ஒப்படைவு செய்கிறேன் என மனு அளித்துள்ளார். கடை நகராட்சி வசம் ஏற்கப்பட்டது. கடையை பொது ஏலம் விட மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கலாம் என வருவாய் ஆய்வர் அறிக்கை அளித்துள்ளார். எனவே பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். **43, 46, 48, 49, 57, 58, 59, 60, 61, 70, 71** மற்றும் **72**, மொடச்சூர் கடை எண்.**1**, பழைய ஆஸ்பத்திரி வீதி, கடை எண்.**16** (கிழக்கு பார்த்த கடை) ஆகிய கடைகளை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** **1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2)** ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கலாம்.

11) இந்நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர்களுக்கு 4 சம தவணைகளில் ஒரு காலாண்டுக்கு ரூ.**1000/–** வீதம் செலுத்த **01.01.2019**ஆம் தேதி முதல் உபவிதிகள் திருத்த அறிவிப்பை தினமணி நாளிதழில் **16.10.2018**ஆம் தேதியன்று விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.**16,128/–**ஐ செலுத்துவதற்கு அனுமதியும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

12) இந்நகராட்சி அனைத்து பிரிவுகளில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் **2017–18** ம் ஆண்டிற்கு தேவைக்கேற்ப, விடுபட்ட வீடுகளின் வரிவிதிப்பு மற்றும் குறைவான வரிவிதிப்பு தொடர்பான வீடுகளின் கணக்கெடுப்பு பணி முடித்து அவைகளை கணினியில் பதிவு செய்து ஒவ்வொரு வரிவிதிப்பிற்கும் கணக்கீட்டுத்தாள் மற்றும் சிறப்பு அறிவிப்புகள் வழங்க கணினியில் பிரிண்ட் எடுக்கவேண்டி உள்ளதாலும், வார்டு மறுவரையறை பணி குறித்த படிவங்கள் அறிக்கைகள் தயாரிக்க வேண்டியுள்ளதாலும் **31.03.2018** வரை தேவையான டோனர்கள் தேவைக்கேற்ப விநியோகம் செய்துகொள்ள ரூ.**5.00** லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி டோனர்களை அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனமான ஈரோடு மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சங்கம் லிமிட், IND.No.1765 ஈரோடு அவர்களிடமிருந்து விநியோகம் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.